★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QB/894/78

வலர்: 21 வைகாசி: 23 றஜப்: 10 இதழ்: 116

யாழ்ப்பாணம் புதன்கிழமை 6-6-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA RECEIVED 1979-6-26 PERIODICALS DIVISION LIBRARY

காணுவில் சதிப் புரட்சி!

இராணுவ அரசு கவிழ்ப்பு

ஆக்ரா, ஜூன் 5

காணுவில் நேற்று ஏற்பட்ட சதிப்புரட்சியை அடுத்து இராணுவ அரசு கவிழ்க்கப்பட்டது.

விமானப்படையினரே இப் புரட்சியை மேற்கொண்டுள்ளனர். ஏற்கனவே சதிமுயற்சி விக் ஈடுபட்டு இராணுவ அரசினால் சிறைவைக்கப்பட்ட விமானப்படைத் தளபதியின் திட்டப்படியே இப்புரட்சி நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஏற்கனவே திட்டமிட்டபடி இம் மாதம் 18-ம் திகதி காணுவில் பொதுத் தேர்தல் நடைபெறும் என புதிய புரட்சி அரசு அறிவித்துள்ளது. (இ)

ரகுராமையா காலமானார்

(சென்னை)

முன்னாள் இந்திய மந்திரிமந்திரி திரு. ரகுராமையா இன்று மாரடைப்பால் காலமானார். அவரது ஈமைக்கிரியைகள் வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெறவிருக்கிறது.

அரசியல் சார்பற்ற நியமனங்கள்

[கொழும்பு]

அரசாங்கசேவைகளும், கூட்டுத்தாபனங்களுக்கும் நியமனங்கள் அரசியல் சார்பற்ற முறையில் வழங்கப்படுமென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கக்கட்சிக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

50பேர் கருகி மாண்டனர்

பாங்கொக், ஜூன் 5

பாங்கொக்கில் எண்ணெய் தாங்கி லொறி ஒன்றும் பிரயாணிகள் பஸ் ஒன்றும் மோதியதை அடுத்து 50 பேர் பலியாகினர்

விபத்திற்குள்ளான எண்ணெய்தாங்கி லொறிவெடித்ததுபஸ்ஸில் நேற்றிரவு அடுத்தநேரம்பதுபிரயாணிகளும்கருகி மாண்டனர் [இ]

அணிசேரா இயக்க மாநாடு

கம்பூச்சியா பிரச்னைக்கு தற்காலிகமாகத் தீர்வு

இன்று அமைச்சர்கள் மட்ட மாநாடு

ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியக அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு, இன்று புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமாகும்போது இந்த மாநாட்டை எதிர்நோக்கியிருந்த கம்பூச்சியப் பிரதிநிதித்துவம், எகிப்தை வெளியேற்றுவது போன்ற சிக்கல்கள் யாவும் தீர்க்கப்பட்டுவிடும் என்றும்சு முகமானமுறையில் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறுமென்றும் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சென்ற திங்கட்கிழமை ஆரம்பமான அணிசேராநாடுகளின் இணைப்புப் பணியக அதிகாரிகள் தூதுவர்கள் தரப்பிலான ஆரம்பக் கூட்டத்தில் கம்பூச்சியாவின் பிரதிநிதித்துவமும், எகிப்தை அணிசேரா நாடுகளின் இயக்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற அரபுநாடுகள் பலவற்றின் வற்புறுத்தலும் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருந்தது. இப் பிரச்னைகள் சம்பந்தமாக முதல்நாள் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றபோதிலும் எதுவிதமுடிவும் மேற்கொள்ளப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது- கூட்டத்தில் ஏதுவிதமுடிவும் மேற்கொள்ளப்படாது ஒத்திவைக்கப்பட்ட போதிலும் இப் பிரச்னை பற்றி தனிப்பட்ட முறையில்பிரதிநிதிகளுக்கிடையில் தொடர்ந்து கலந்துரையாடல்களும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுவந்தன.

பார்வையாளராயிருக்க சம்மதம்

அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமான போது கம்பூச்சியாவின் பிரதிநிதித்துவப் பிரச்னை தற்காலிகமாக கைவிடப்பட்டிருப்பதாக கூட்டத்துக்குத் தலைமை வகித்த இலங்கைப்பிரதிநிதி திரு பி. ஜே. பெர்னாண்டோ அறிவித்ததாகத் தெரிகிறது-

[6ம் பக்கம் பார்க்க]

சமாசத்தை பதிவுசெய்ய நடவடிக்கை எடுப்பேன்

— அமைச்சர் [illegible]

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இயங்கிவரும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சியைப் பாராட்டும் அதே வேளையில் இச்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை நன்கு பரிசீலனை செய்து தீர்த்து வைக்க முயற்சிப்பதோடு உங்கள் சமூகத்தின் நலன்கருதி உங்கள் சமாசத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பேன்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மாநாட்டில், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹெரத் மேற்கண்டவாறு கூறினார்.

தெ. ப. பொ. உ. சங்கங்களின் இணைப்பதிகாரி திரு. வ. நடராஜா, சங்கங்கள் சார்பில் மைஜர் ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையில் கூறியதாவது: வடபகுதியில் கல்வி பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஒரு சமூகத்தின முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்டு லாபத்துடன் இயங்கிவரும் இச்சங்கங்களுக்கு விதிக்கப்படும் விற்பனைவரியை 15 வீதத்திலிருந்து 10 வீதமாக குறைத்து தொழில் நலனுக்காக அமுலிசெய்ய வழிவகுக்கப்படவேண்டும் என்றார்

மார்ச் ஏப்ரல், மே மாதங்களில் தினமும 2000 லன்கள் ஊற்றப்படுகிறதென்றும் இதனால் லட்சம் ரூபாவிற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

கைதடியில் மூவர் கைது

[யாழ்ப்பாணம்]

கைதடியில் இரு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள மோதல் தொடர்பாக பொலிசார் சந்தேகத்தின் பேரில் மூவரை நேற்றுக் கைதுசெய்துள்ளனர். மற்றும் சில சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சுமார் மூவாயிரம் மீனவர்கள்துகளுக்கு சேதமேற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் செய்யப்பட்ட புகாரை தொடர்ந்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

இரு சமூகங்களுக்கிடையில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் பொதுஸ்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன. [ச]

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருடம் வைகாசித் திங்கள் 24ம் நாள் (7-6-79 நாளை) வியாழக்கிழமை காலை 6-00 மணி முதல் 7-00 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்

திருநிறை செல்வன் **புவனச்சந்திரன்** அவர்களுக்கும்

திருநிறை செல்வி **விமலாதேவி** அவர்களுக்கும்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு குடும்ப சமேதரராய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

நல்வரவை நாடும்,

திரு. திருமதி சி. சின்னத்துரை,
"கல்கி இல்லம்"
தாவடி வடக்கு, கொக்குவில்.

திரு. திருமதி த. சிவக்கொழுந்தர்,
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

2674

பம்பலப்பிட்டி தபால் நிலையத்தில் தமிழ் தந்திக் கட்டளையை ஏற்க மறுப்பு

தபால் மா அதிபருக்கு புகார்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி தபால் நிலையத்தில் தமிழில் எழுதப்பட்ட காசுக் கட்டளையை அங்கு கடமையாற்றியஊழியர் ஏற்க மறுத்துவிட்டார்.

கொழும்பு காலிவீதியைச் சேர்ந்த திரு விக்ரர் செல்வம் என்பவர், வேலணை 6ம் வட்டாரத்தில் உள்ள தமது மகளான செல்வி வி. எஸ். தேன்மொழிக்கு காசுக்கட்டளை அனுப்ப தமிழிலிவிண்ணப்பித்திருந்தார். தமிழ் காசுக்கட்டளையை அங்கு கடமையாற்றிய ஊழியர் ஏற்க மறுத்ததுடன் அவரை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் கூறப்படுகிறது

இதுபற்றி திரு. விக்டர் உடனடியாக தபால்மாஅதிபருக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து இவ்விடயமாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தபால்மாஅதிபர் பதிலளித்துள்ளார்.

வ. மகாலிங்கம்
சட்டத்தரணி, கரவெட்டி.

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மரவட்ட நீதிமன்றம்

கரணவாய் வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணபிள்ளையின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக

சின்னையா கிருஷ்ணபிள்ளை
காலஞ்சென்றவர்
பழனிப்பிள்ளை கனகரத்தினம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. — மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் 1072 / ரி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேற் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இந்தாக அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 20 ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதுள்ளதற்கு காரணம் காட்டுமாறு இந்தாக் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ம் நாளன்று திகதியிடப்பட்டுள்ளது 2666

முதலிலே ஆக்கப்படும் முற்றுண கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்

ஏழாலை, ஏழாலை மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற சிவசிதம்பரம் கைம்பெண் இரத்தினம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்,

மரணமெய்தியவர்
ஏழாலை, ஏழாலை மேற்கைச்சேர்ந்த சிவசிதம்பரம் கிருஷ்ணனந்தன்-
மனுதாரர்,

மரண சாதன
) ரி. 22.
நியாயாதிக்கம்)

மேலே காட்டப்பட்ட இலக்கம் கொண்ட வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்து நிர்வாகப்பத்திரம் பெறுவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுண கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும், இந்தாக் அறிவிக்கப்படுகின்றது.

1978ம் ஆண்டு ஐப்பசி 12ந் திகதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி,

ஒப்பம்

ரிச்செட் ஜெயராஜசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:-

அ. உமாசங்கர்,
மனுதாரரின் சட்டத்தரணி.
2641

தொலைபேசிபரிவர்த்தனைப் பெண்கள்

இனிமேல் புதிதாக

நியமிக்கப்பட மாட்டார்கள்

[கொழும்பு]

'ஹலோ கேர்ள்ஸ்' என அழைக்கப்படும் தொலைபேசி பரிவர்த்தனைப் பெண்கள் எதிர்காலத்தில் புதிதாக வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்று தபால் தந்தி அமைச்சர் திரு டி பி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கையின் பல பகுதிகளிலும் நேரடி தொலைபேசி இணைப்புச் சேவை விஸ்தரிக்கப்பட்டுவிடும் என்றும் இதனால் தொலைபேசிப் பெண்கள் அவ்வேலைக்கு அவசியமில்லை என்றும்

[5-ம் பக்கம் பார்க்க]

ஓராண்டு நினைவு அஞ்சலி

சவிரிமுத்து சின்னத்துரை

தோற்றம்: 11-10-1911 மறைவு: 6-6-1978

சீவியத்தில் இவரை நேசித்தோர்களே மரணத்திலும் இவரை மறவாது இவரின் ஆத்ம சாந்திக்காக யேசுவிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

இவரது ஆத்ம சாந்திக்காக 6-6-1979 இன்று புதன்கிழமை காலை 6-30 மணிக்கு கோப்பாய் மாதா கோவிலில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் 2668

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருடம் வைகாசிமாதம் 28-ம் நாள் (11-6-79) திங்கட்கிழமை காலை 5-30 மணிமுதல் 7-00 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

செல்வன்
கந்தையா தெய்வேந்திரன்
[A.C.M.A Dip. P.F.M]
கணக்காளர்,
(அரசாங்க அழுத்தகம்)
அவர்களுக்கும்

எமது புதல்வி
செல்வி
சிவமணி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில், திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி பணிவன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

மல்லாகம்
6-6-79.

வ. க. மயில்வாகனமும்,
பாரியாரும்

2679

வரி விளம்பரம்

தேவை

நவீன முறையில் பிளவுவிக்கவும், மதிறும் உடைகள் வெட்டித்தைக்கக்கூடிய பெண்களின் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2669, C/o சமநாடு, யாழ்ப்பாணம்.
2669

விற்பனைக்கு

8-6-79 கல்லிவிளாகிகுளம் முத்துமாரி அம்மன் பொங்கல் திருவிழா அன்று கோவில் வீதியில் மிக்ஸ்சர் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மிக்ஸ்சர் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலிதீன்பாக்கும்; மில்க்வைற் வெளியீட்டு பிரகாரங்களும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர், எமது விளம்பர விற்பனை வாகனத்தில் கொடுத்து துவாய், ஆப்பியாசக்கொப்பி, மில்க்வைற் செய்தி, வெளியீட்டு புத்தகங்களை யாவற்றையும் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம். மிக்ஸ்சர் யாழ்ப்பாணம். 2663

FOR SALE

Air Conditioners 18000 Cu ft, Refrigerator 10 Cu ft 2 door Model, Garden irrigation Springlers, Wolf drill Armatures, Pressure Meters available - Inspection Walker's Show Room.
2678

அறிவித்தல்

இல. 288, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 'ஸ்ரீ குமார விலாஸ்' ஸ்தாபனத்தின் உரிமையாளராக இருந்து காலஞ்சென்ற பெத்த பெருமாள் முருகையா நாராயணனுடன் கொடுக்கல் வாங்கல் உடைய யாவரும் தகுந்த சாட்சியத்துடன் என்னுடன் இன்றில் இருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

இ. கமலநாதன் (சட்டத்தரணி)
'திருப்பதி' திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
2671

குஷிபா விநியோகஸ்தர்கள் வழங்கும் ஜனதா தேயிலைக்கான மேமாத பரிசுத் திட்டம்

1-வது பரிசு: B 0969 2-வது பரிசு: B 1539
3-வது பரிசு: C 0971

ஆறுதல் பரிசுகள்: A 0792, B 1580, C 2083, B 2400, A 0324

வாடிக்கையாளர்கள் இதற்கான பரிசுகளை மாவிட்டபுரத்தில் வந்து நேரில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி
குஷிபா விநியோகத்தர்கள்
மாவிட்டபுரம்

2672

சிவமயம்

புதுமனைப்புகுவிழா

அன்புடையீர்,

நிகழும் சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் 24-ந் நாள் (7-6-79) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் 12-00 மணிவரை வரும் சுவாதி நட்சத்திர சுபமுகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற "பழம் நீ"

என்னும் புதுமனையில் பிரவேசம் செய்யவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மனையை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
நா. தியாகராசாவும் பாரியாரும்
[பிரதேச முகாமையாளர், வடபிரதேச போக்குவரத்துச் சபை]

126, அரசடி வீதி,
கந்தர்மடம்சந்தி,
யாழ்ப்பாணம்.

[2662]

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 14568

1. சதாசிவம் கந்தையா இல. 13, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. முத்துக்குமாரு இராமலிங்கம்
2. முத்துக்குமாரு இராமலிங்கம் மனைவி தேவகனி, இருவரும் இல. 40, கொட்டடி.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 14568-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1துண்டுக் காணி 1979-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதி (28-8-79) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 31650/-ம் 7-10-74 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் ரூபாய் 30,000/-க்கு 18 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 775/94, நடைபெற்ற செலவு ரூபாய் 509/66, நடைபெறவேண்டிய செலவு ரூபாய் 152/50மேலதிக சமயாசமயச்செலவு ரூபாய் 113/38 கொடுக்கவேண்டியிருப்பது. இதில் ரூபாய் 3000/- கொடுபட்டது.

ஆதனவிபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பகுதி முகமாலை கோவிற்பற்று கிளாலி இறை "காரக்காடு தோட்டம்" ஏக்கர் நாற்பது (ஏ 40) தென்னைமரங்களும் எல்லை கிழக்கு தொகுதி இராமலிங்கம் பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு ரோமன்கதலிக் சேர்ச்சுக்குரிய விவரிக்காடு (அவரிக்காடு) என்னும் தென்னம் தோட்டம், மேற்கு கிராம சபை றோட் பதிவு B 61/132 இவ்வாதனம் அளவைக்காரர் T. கந்தையாவால் 3-2-71ல் அளந்து விபரிக்கப்பட்ட 4916-ம் இலக்கப் படத்தில் காட்டப்பட்டது.

இ. கனகரத்தினம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

10, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

2676

கேள்வி விளம்பரம்

உரும்பராய்- ஊரெழு பட்டினசபை

கிழக்கானும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 1979ம் ஆண்டு ஆனி மாதம் 20ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் சில்வைற்ற கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வோர் வேலைக்கும் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 15/-ம் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம் செலுத்தி, 18-06-79ந் திகதி பிற்பகல் 2 00 மணிவரையும் பட்டின சபைக் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்களை இணைப் பிரதிகளாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். அல்லது கந்தோரிலுள்ள ரெண்டர் பெட்டியில் போட வேண்டும் கேள்விகள் பிரதி 20-06-79ந் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிற்தாமல் கிடைக்கக்கூடியதாக யாழ்ப்பாணக் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கேள்வி கொண்டகடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் இக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்

1. உரும்பராய் கந்தபகப் பிள்ளையார் கோவில் வீதி.
2. அயிட்டப்புலம் வீதி.
3. பொக்கணை சுன்னாகம் வீதி ஊரெழு.
4. உரும்பராய் செல்வபுர வீதி.

எஸ். கந்தசாமி,
(ஒப்பம்)
விசேட ஆணையாளர்,
உரும்பராய் ஊரெழு பட்டணம்.

31-05-1979 2675

"எமது பிரதேசம் ஆக்கிரமிக்கப்படும்போது

தமிழ்இளைஞர்கள்வெளிநாடு செல்வது கவலைக்குரியது

எதிர்க்கட்சித்தலைவர் கவலை

செல்வன் சி சக்திதரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நமது இளைஞர்கள் இன்று வேலைதேடி வெளிநாடு போய திலேயே கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் அது நிரந்தரமானது அல்ல. இங்கிலாந்தில் வெளியார் தொழிலாளிகள் முடியாததிலே ஏற்பட்டுவருகிறது. எமது பிரதேசம் ஆக்கிரமிக்கப்படும்போது எமது இளைஞர்கள் வெளிநாடு செல்வது கவலைதருகிறது. எமது பிரதேசங்களைக் காக்கும் பணியில் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்".

மாவட்ட விவசாய அதிகாரி திரு நா. சிவமுத்து லிங்கம், தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. ஏ நீலகண்டன், திருமதி ம அமிர்தலிங்கம், செல்வன் கி. சக்திகிரிவன் உட்பட பலர் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

[மாவிட்டபுரம்]

"விடுதலைகோருகிற இனத்திற்கு சொந்தப் பிரதேசம் ஒன்று இருப்பது மிகவும் அவசியமாகும். சொந்தப் பிரதேசம் இல்லாத இனம் விடுதலை கோருவதில் அர்த்தமில்லை. ஆகவேதான் எமது பிரதேசங்களைக் காப்பது அவசியமாகின்றது. வெளிநாட்டு வேலைகளை மோகங்கொள்ளாது எமது பிரதேசங்களை காக்கும் பணியில் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்".

இவ்வாறு மாவிப்பாய் தொகுதி இளைஞ விவசாயிகள் கழகங்களின் பொருட்காட்சி, கலைவிழா ஆகியவற்றில் கலந்துரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ அமிர்தலிங்கம் கூறினார்.

விவசாயப் பொருட்காட்சி ஏழாலை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும், கலைவிழா ஏழாலை முத்தமிழ் அரங்கிலும் நடந்தன

மக்கள் கருத்து

கொடிகாமம் வைத்தியசாலையின் குறைகள்

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவருவோர் பல இன்னல்களுக்கு இலக்காக வேண்டிய நிர்ப்பந்தநிலை உருவாகியுள்ளது. குழாய மூலம் நீர்பெறக்கூடிய வசதிகளிருந்தும் நீர்கிணற்றிலிருந்து அள்ளியே பாவிக்கவேண்டியுள்ளது. நோயின் அவதி ஒருபுறம் மறுபுறம் நீர்கிணற்றிலே அள்ளிப் பாவிக்கவேண்டியநிர்ப்பந்தம். அரசினரால் புத்தம்புதிய நீர் இறைக்கும் யந்திரமொன்று வழங்கப்பட்டும் நீர்விநியோகம் செய்யப்படாதுள்ளது. அந்த யந்திரம் வழங்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு மேலாகியும் வைத்தியசாலை வளவிலுள்ள ஓர் அறையில் பாதுகாப்பாக வைத்து பூட்டப்பட்டுள்ளது. நீர் சேமித்துவைக்கும் நீர்த்தாங்கியில் சிறிது நாளாகவிருப்பதால் நீரிறைக்கும் யந்திரத்தின் மூலம் நீர்த்தாங்கியில் நீரைச் சேமித்துவைத்து வைத்தியசாலை நோயாளருக்கு வழங்க முடியாமலிருக்கின்றது.

அத்துடன் ஆண்கள் தனியே சிகிச்சைபெற முடியாமலிருக்கின்றது. அதற்கான ஒரு வார்ட் மண்டபம் கட்டி ஆண்களும் தனியே சிகிச்சைபெற வசதிசெய்து தரப்படவேண்டும். இவ்வைத்தியசாலையில் இப்போது கர்ப்பிணி நோயாளர்களையும் மற்றும் பெண் நோயாளர்களையும் மட்டுமே அனுமதித்து வருகின்றார்கள். சாவகச்சேரியிலிருந்து பளை வரைக்கும் எந்தவொரு வைத்தியசாலையுமே கிடையாது. சாவகச்சேரியிலும் பளைக்குமிடையில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வசித்துவருகின்றார்கள். அவர்கள் வாகன வசதிபெற்று சாவகச்சேரி, பளை போன்ற வைத்தியசாலைகளுக்கு செல்வதென்றால் எவ்வளவோ பணத்தை வீணாக விரயமாக்கவேண்டியுள்ளது.

மேலும் கொடிகாமம் அரசினர்வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் தங்குவதற்கு விடுதி இல்லை. இதனால் இரவு வேளையில் இவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

ஆதலால் டாக்டர் இரவு தங்குவதற்கு வசதியாக ஒரு விடுதியும் அத்தியாவசியமாக அரசினரால் கட்டிக்கொடுக்கப்படவேண்டும். இக்குறைபாடுகளை தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனம் செலுத்தவேண்டும்.

க செ. சிவநாயகம்
மிருசுவில் வடக்கு.

பசு பாதுகாப்புச் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பசு பாதுகாப்புச் சபைப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு கஸ்தூரியார் வீதியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் ஆலயங்களுக்கு உரிமையானவைகளைத் தானமாக வழங்கவதைத் தடைசெய்வது பற்றி ஆராயப்படும். (மெ

ப. நோ. கூ. சங்க இயக்குநர்கள் தலைவர் ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப நோ கூ சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவரும், ஆறு உறுப்பினர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்

அண்மையில் நல்லூர் சங்க பணியாளர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தின் எதிரொலியே இவர்களது ராஜினாமாவிற்கான காரணமென அறியப்படுகிறது

இந்த வேளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கக் கிளைக்குழு உறுப்பினர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து 20 கிளைகளிலு உறுப்பினர்களை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

(கொ-இ)

ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஊரியவத்தை மடத்தடி ஸ்ரீகாளிகாமன் தேவஸ்தானத்தின் ஆலோசனைக் கூட்டமொன்று இன்று தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஆலயத்தை எதிர்நோக்கும் பலவேறு பிரச்னைகளை ஆராய்ந்து ஆவனசெய்வதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் பூஜை திருவிழா உபயகாரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (க)

யாழ் நகரில் போக்குவரத்து ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நகரில் நடைபெறுவது போன்று யாழ்ப்பாணத்திலும் வாகனப் போக்குவரத்து அதிகமாகவுள்ள சந்திகளில் பொலிசார் நிறுத்தப்பட்டு வாகனங்களின் போக்குவரத்து ஒழுங்குகள் கவனிக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணப் பகுதியே விதி விபத்துக்கள் அதிகம் நடைபெறுவதால் அவ்விபத்துக்களைத் தடை செய்வதற்காகவும், மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்காகவும் யாழ்நகரிலுள்ள கி. எஸ். கே. சந்தி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, மின்சார நிலையச் சந்தி, கஸ்தூரியார் வீதிச் சந்தி ஆகிய இடங்களில் பொலிசார் நிறுத்தப்பட்டு போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சந்திப் பாதுகாப்புகள் வெகுவிரைவில் எல்லா இடங்களுக்கும் பரவலாக்கவுள்ளதாக யாழ் பொலிஸ் அதிபர் லியோ பெரேரா பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார். (கொ)

"யாழ். மாநகர

உறுப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்கவும்"

(யாழ்ப்பாணம்)

"சனசமூக நிலையங்களுக்கு யாழ் மாநகரசபை பல வேலைத் திட்டங்களை அளித்து தொண்டைமானாறு போன்ற வறிய கூடியவிரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் குருநகரில் மாநகரசபை உறுப்பினர்களாக பலர் இருப்பதால் உங்கள் சனசமூகநிலைய வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கை எடுக்க பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்"

இவ்வாறு குருநகர் செல்வநாயகம் சனசமூக நிலையத்தின் இரவு பாடசாலைக் கட்டிடத்தைத் திறந்தவைத்துப் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

யாழ் மாநகர்சபை உறுப்பினர் திரு எஸ். தியாகராஜா மலர்களைவிளக்கேற்றி வைத்தார் பாடசாலை பொறுப்பதிபர் திரு. பீலிக்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. செயலாளர் திரு வி எம் ஜெறுட் நன்றி கூறினார். (கு)

CENTRIC

Robin

Sinha

Villiers

சென்ட்ரிக்
ஆயுள் காலம் பூராவும்
உழைக்கும் 2"
விவசாயப் பம்புகள்

உறுதிப்பாடுடைய சென்ட்ரிக் விவசாயப் பம்புகள் ஆண்டாண்டு காலம் உழைக்கின்றன. உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி, "ரொபின்", "சிங்க", "வில்லியர்ஸ்" ஆகிய எந்தவொரு இயந்திரத்துடனும் பூட்டி பாவிக்கக்கூடிய பம்பு "சென்ட்ரிக்" மட்டுமே.



"சென்ட்ரிக்" பம்புகள் முற்றிலும் இரும்பினால் வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்டவை. ஆதலின் இவை காலத்தால் சிதைவுறாது உங்கள் ஆயுள் காலம் முழுவதும் உங்களுக்குத் தொல்லையில்லாத சேவை புரிகிறது.

1950ம் ஆண்டு முதல் இலங்கையில் பாவனையில் இருந்து வரும் "சென்ட்ரிக்", அதிசிறந்த பம்புகளில் ஒன்று என்பதற்கு இன்று உற்பத்தி செய்யப்படும் அநேக போலி பம்புகளே சான்று பகர்கின்றன.

உங்கள் நீர்ப்பாசனத் தேவைகளுக்கு நம்பிப் பாவியுங்கள் "சென்ட்ரிக்"

பின்வரும் வியாபாரிகள் உட்பட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல முன்னணி வர்த்தகர்களிடமும் கிடைக்கும்.

துர்க்கா ஆட்டோ ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்,
ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7204

மொத்த விற்பனை விசாரணைக்கு பின்வரும் எமது யாழ்ப்பாணத்தின் பிரதான விநியோகத்தர்களுடன் தொடர்புகொள்க:

நியூ டோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143, ஸ்டேன்லி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, காலிவீதி, கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9

MeIAGS

ஜோர்டான் ஆற்றங் கரையில்

இஸ்ரேல் குடியேற்றம்: அமெரிக்கா கண்டனம்!

வாஷிங்டன், ஜூன் 5

ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையோரமாக புதிய குடியேற்றங்களை அமைக்க இஸ்ரேல் மேற்கொண்டு வரும் முயற்சியை அமெரிக்கா பலமாகக் கண்டித்துள்ளது

எதிர்காலத்தில் பாலஸ்தீன மக்களுக்கென தனி நாடு ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள- முன்னர் இஸ்ரேல் ஆக்கிரமித்த ஜோர்தான் ஆற்றின் மேற்குக்கரையோரத்தில் இஸ்ரேல் குடியேற்றத் திட்டங்களை அமைக்க மேற்கொண்டு வரும் முயற்சி மத்திய கிழக்கில் மேலும் அமைதியின்மையை ஏற்படுத்தும் என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எகிப்து-இஸ்ரேல் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட சில பகுதிகளை இஸ்ரேல் எகிப்திடம் திருப்பி ஒப்படைத்த பின்னர் இஸ்ரேல் குடியேற்றத் திட்டங்களை அமைக்க முயற்சித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

நீதிமன்றம்- பொலிஸ் நிலையங்கள் பால் விற்பனைநிலையங்கள் தீக்கிரை!

பரோடாவில் ஆர்ப்பாட்டக்காரர் அட்டகாசம்

புதுடில்லி, ஜூன் 5

இந்திய மேற்கு மாநில நகரமான பரோடாவில் பால் விலையேற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள்கூட்டத்தினர் மாவட்ட நீதிமன்றம் ஒன்றையும் பல பொலிஸ்நிலையங்களையும் தீயிட்டனர்.

25 பால் விற்பனை நிலையங்களுக்கும் 2 பஸ்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர் தீ வைத்தனர் என்றும் அறிக்கைப்பட்டது. இதை அடுத்து அங்கு 12 மணி நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

(இ)

உலகவலம்

குஜராத்தில் பொலிசாரின் கிளர்ச்சி வாபஸ்பெறப்பட்டு விட்டது.

0 0 0

இந்தியாவின் இரண்டாவது செயற்கைக் கோள் இவ்வார இறுதியில் சோவியத்யூனியனின் உதவியுடன் விண்வெளிக்கு அனுப்பப்படும்.

0 0 0

தென்னாபிரிக்க அதிபர் திரு. ஜோன்வொஸ்டர் தமது பதவியிலிருந்து நேற்று ராஜினாமாச் செய்தார்.

0 0 0

புதுச்சேரியின் முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. டி. ராமச்சந்திரன் அங்கத்தினர் நிலையிலிருந்து வெளியேறிவிட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குராரிப்பணிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சு பொன்னம்பலம் [அதிபர்], உப தலைவர்: திரு இ செ மனிமதராயன், பொதுச் செயலாளர்: திரு க நவரத்தினம், இணைச் செயலாளர்: திரு சு சபாரத்தினம், பொருளாளர்: திரு சு சபாரத்தினம் [ஆசிரியர்], உறுப்பினர்கள்: ச தியாகராஜா, கா சதாசிவம், திரு ச சண்முகலிங்கம், திருமதி இன்னாளி, மணக்குப் பரிசோதகர் திரு ச கயிலாயபிள்ளை.

இப்பாடசாலையின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆராயப்பட்டதுடன் பெற்றோர் உட்பட நலன் விரும்பிகளும் வருடமொன்றுக்கு ரூபா 5 செலுத்தி சங்கத்தில் உறுப்புரிமை பெறலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. [கு-அ]

உருத்திரபுரம் ம. வி.

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, உருத்திரபுரம் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குராரிப்பணிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நா குருநாதன் [அதிபர்] செயலாளர்: திரு மு சு கதிரவேலு தம்பி பொருளாளர்: திரு ஆ சந்திரசேகரம், உப தலைவர் திரு ஐ ஜயாத்துரை, உப செயலாளர்: திரு செ சுந்தரலிங்கம், ஐந்து பேர் கொண்ட செயற்குழுவொன்றும், விவசாயக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. [கு-அ]

கொற்றவத்தை அ. மி. த. க. பா.

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, கொற்றவத்தை அ. மி. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குராரிப்பணிக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. திருப்பதி (அதிபர்). செயலாளர்: திரு இ. தங்கவேலாயுதம். பொருளாளர்: திரு. வ வேலுப்பிள்ளை. செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் க புவேந்திரன், மு. நடேசன், ச. உருத்திராபதி, இ மனாலிங்கம், மணக்குப் பரிசோதகர்: திரு க சபாரத்தினம்

(கு-அ)



உடனடியாக விநியோகிப்பதற்கு குறிப்பிட்டளவுக் கையிருப்பு உண்டு

சாட்டோ டிஜி-75

மண்ணெண்ணெய் கை இயக்க ட்ராக்டர்

விசேட அம்சங்கள்

- ஒயிலான தயாரிப்பு
- 7 ஹோர்ஸ் பவர். நிமிடத்திற்கு 1900 சுழற்சி
- சேற்று நிலத்திலும் உலர்ந்த நிலத்திலும் ஒரே விதமாக பயன் படுத்துவதற்கு ஏற்றது.
- அடிக்கடி உடைந்துபோகும் கேபிள்களுக்குப் பதில் நீடித்து உழைக்கும் பலம் வாய்ந்த தகடுகளே இதில் பொறுத்தப் பட்டுள்ளன.
- சாட்டோ கை ட்ராக்டர் அங்கும் இங்கும் சாயாது சம பலம் கொண்டது.
- ஏனைய கை ட்ராக்டர்களை விட சாட்டோ கை ட்ராக்டரின் உதிரிப் பாகங்கள் 50% விலை குறைவானவை. அவ்வளவு இலாபகரமானது.
- ஏனைய ட்ராக்டர்களை வாங்கும்பொழுது பணம் செலுத்திப் பெற வேண்டிய மட்கார்ட், சாட்டோ ட்ராக்டருடன் இலவசமாக வழங்கப்படுகிறது.
- ரோட்டரி ரில்லரை தொடிப் பொழுதில் கழற்றிப் பூட்டலாம்.
- தகட்டுக் கலப்பை, மட்கார்ட் என்பவற்றுடன் சாட்டோ கை ட்ராக்டரின் மலிவு விலை ரூபா 22,875/-

எமது பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்:

அம்பலாங்கொடை	— தாச பிரதர்ஸ்
மாத்தரை	— ஜினசிரி டிரேட் ஏஜென்சிஸ்
மின்னேரி	— ஆர். டப்ளியூ. குரே

விசாரணைகள்:-

TEAM

செரண்டிப் இம்பெக்ஸ் லிமிட்டெட்,
135, டாம் வீதி கொழும்பு 12. தொலைபேசி: 31827, 31116.

நாகம்ஸ் (கன்னாபம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கிருஷ்ணகுமாரி
ஆனந்தன்
நாகமலை அழகி

Rio (Jaffna) Phone: 7667
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m
Spy Who Went To Hell

23-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(எஸ்.ஜானகி நடிப்பு)

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK
Daily 4-30, 7-00 & 9-30 p.m; only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

தினசரி 4 காட்சிகள்
லஷ்மி எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
(வரம்நகர்) நடித்த
கணவன்
(புதிய பிரதி)

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கல்யாணகுமார் - விஜயகுமாரி
மணி ஓசை
(புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளி விளக்கு
புதிய பிரதி ஈக்கமர்கள்

SHANTHI JAFFNA Daily: 5 Shows
(Phone 7642) 10-30, 2-30 4-45, 7-00, 9-30 P.M.
Jack Palance, Burl Ives, Broke Peters in
The Mc Masters Colour
Full Action Packed Film
8th Gamini Fonseka, as Nadarajah
SARUNGALE
(Sinhala - Tamil)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சனி, ஞாயிறு 10-30, 2-30 4-45 & 9-45
எம்.ஜி.ஆர் — சரோஜாதேவி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — சரோஜாதேவி
ஆடிப்பெருக்கு

இனிமேல்...
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

நேரடி தொலைபேசி இணைப்பு சேவை சகல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டதும் இப்போது சேவையில் உள்ள 9 ஆயிரம் தொலைபேசி பரிவர்த்தனைப் பெண்களும் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர். [இ]

வெஸ்லி
காளிப்பாய்
தினசரி 6-30, 9-30
ரஞ்சன்- எம். கே. ராதா
டி. ஆர். ராஜகுமாரி
சந்திரலேகா

சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இலக்கியம் மிக அவசியம்

மு. எ. சங்க கருத்தரங்கில் சிவத்தம்பி

(யாழ்ப்பாணம்)

எந்த ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இலக்கியம் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்தது. ஒரு காலத்தில் உதவாதது என்று ஒதுக்கிவிடப்படுவது. பின்னொரு காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகமாறி விடுகிறது.

இவ்வாறு யாழ். சண்மார்க்க ஐக்கிய சங்க நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறினார்.

விமர்சனமும் ஆக்கமும் ஒன்றிணையும் போதுதான் இலக்கியம் வளரச்சி அடையும் என்றும் அவர் கூறினார்.

திரு. எஸ். மௌனகுரு பேசுகையில் கூறியதாவது:

"வியாபார நோக்கத்தை இலட்சியமாகக் கொண்ட பத்திரிகை ஸ்தாபனங்களுக்குக் கட்டுப்படாத தனிப்பட்ட எழுத்தாளர் களினூடாகத் தான் நாட்டில் நல்ல இலக்கியத்தை உருவாக்க முடியும்.

1956ம் ஆண்டுக்குப்பின் தான் ஈழத்தில் தரமான இலக்கியங்கள் உருவாகியுள்ளன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முற்போக்கு எண்ணங் கொண்டவர்களை ஒன்று கூட்டியுள்ளது. இவர்கள்தான் தரமான இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இன்று எழுத்தாளர்களை வழிநடத்தத்தகுதியான ஸ்தாபனம் ஒன்று இலங்கையில் இல்லாதது கவலைக்கிடமானதாகும். முற்போக்கு எழுத்தாளர்கள் காலத்தின் நிலையறிந்து எழுதவேண்டியது அவர்களது கடமையாகும்.

நச்சுஇலக்கியங்கள் இலங்கையிலேயே அதிகம்

திரு. செ. யோகநாதன் பேசுகையில் கூறியதாவது:

"நச்சு இலக்கியங்கள் இந்தியாவில் இருந்துதான் வெளியாகின்றன என்ற தப்பபிப்பிராயத்தைப் போக்க வேண்டியது முற்போக்கு எழுத்தாளர்களது கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் நச்சு இலக்கியங்கள் கூடுதலாக இலங்கையிலேயே உருவாகிவருகின்றன. இது எங்கிருந்து வந்தாலும் அதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்த வேண்டியது எமது கடமையாகும்.

"கிளிமா, வாலுவி போன்றவை. பிற்போக்குத்தனமானவை. அவை பழமொசமான காட்சிகளையும், பாடல்களையும், வசனங்களையுமே மக்களுக்கு வழங்கிவருகின்றன. அதற்கு மாறாக நாம் முற்போக்குக் கருத்துள்ள நாடகங்களையும், தெருக்கூத்துக்களையும் மக்களுக்கு நடாத்திக் காட்டவேண்டும். இதன் மூலம் முற்போக்கு எண்ணங்களை மக்களின் மனத்தில் உருவாக்க முடியும்."

திரு. எம் நித்தியானந்தன் பேசுகையில்: "இங்கு புத்தக விமர்சனம் சரியான முறையில் நடைபெறவில்லை. அதனால் ஈழத்து இலக்கிய வளர்ச்சி மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது". என்றார்.

டொமினிக்ஜீவா பேச்சு

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக்ஜீவா பேசுகையில் முற்போக்கு எழுத்தாளர்களுக்குக்கிடைத்த வெற்றிகளில் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகத்தில் முற்போக்கு எழுத்தாளர்சங்கத்தைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள் பேராசிரியர்களாக உள்ளனர். எழுத்தாளர்கள் வாசகர்களை நம்ப வேண்டும். நிறையப் புத்தகங்களை எழுதவேண்டும். நாம் சமூக சரித்திர ஆசிரியர்களாக மாறவேண்டும் என்றார்.

திரு. கலாபரமேஸ்வரன் பேசுகையில் மீளாய்வு என்பது நச்சுத் தன்மை வாய்ந்தது. அல்லது பிற்போக்குத் தன்மையுடையது என்று கூறுவதை ஏற்க முடியாது என்றார்.

கலாநிதி கைலாசபதி பேசுகையில் இந்த நாட்டிலே சாதிப்போராட்டம், மொழிப் போராட்டம் நடைபெற்ற காலம் 1956ம் ஆண்டு அக்காலகட்டத்திலே இந்த நாட்டிலே இருந்த ஒரே ஒரு இயக்கம் இடதுசாரி இயக்கம்

56ம் ஆண்டு தொடக்கம் 79ம் ஆண்டுவரை இந்த முற்போக்கு இயக்கம் அரசியல் ரீதியாகவும் சாதி ரீதியாகவும் போராடிவந்துள்ளது. இருந்தபோதும் கலாநிதி சிவத்தம்பி எழுதிய கட்டுரை ஒன்றைத் தவிர வேறு எந்த நூலிலிருந்தும் இதைப்பற்றி அறிவதற்கில்லை.

முற்போக்கு இலக்கியம் வளரவேண்டுமானால் ஒரே கிளர்ச்சியை நம்புகின்றபல் வேறுபட்ட அரசியல் குழுக்களும் முற்போக்கு எழுத்தாளர் என்ற அமைப்பில் ஒன்றுசேர வேண்டும்.

எழுத்தாளர்களுக் கிடையில் ஒற்றுமை அவசியம். அரசியல் பொருளாதார ரீதியில் இணைந்து ஒற்றுமையாக செயல்பட வேண்டியது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கடமையாகும்.

முதலாளித்துவ நிறுவனங்களை நாம் நிலைத்ததைச் செய்யத்தான் செய்யும் இந்த நிலையைமாற்ற எமது இயக்கம் போராடவேண்டும் என்றார்.

திருவாளர்கள் டானியல் அன்ரனி, எஸ். முத்துலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

(கொ-இ)

இன்றைய பலன்

வைகாசிவாரம் 23-ம் திகதி
(புதன்கிழமை)
(6-6-1979)

மேடம்: எண்ணிய கருமம் எண்ணியவாறு முடியும். இன்று வாஸ்திரவழியாக பேசும் வரவும் உண்டு. பெரியோர்கள் மதிப்பு கிடைக்கும்.

இடபம்: எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள். தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

மிதுனம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். எடுத்த காரியத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். பெரியோரி ஆசியும் அவசியம் கிடைக்கும்.

கடகம்: தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வணிகத்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும். சிலருக்கு நன்மையான இடமாற்றமுண்டு.

சிங்கம்: பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னிய நபரி ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். நிதானம்வேண்டும்.

கன்னி: வாழ்க்கையில் புதிதான நிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சினேகிதர்வழியால் கவலைகள் தோன்றக் கூடும். விவசாயிகளின் ஏமாற்றத்திற்கு இடமுண்டு மனந்திடம்வேண்டும்.

துலாம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும். மேலிடத்தின் செல்வாக்குப் பாதிக்கப்படலாம். அயலவர்களுடன் அன்பு நடந்துகொள்ளவும்.

விருச்சிகம்: சுற்றுலாவில் உங்கள் செல்வாக்கு வளரும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் பிணக்குகள் பல மடையும். சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

தனுசு: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லையும் அதிகரிக்கும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை வேண்டும்.

மகரம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த உதவி உயர்வுக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்குவியவகாரங்களில் வெற்றிகாணும்.

கும்பம்: எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும் உத்தியோகத்தர்களாகிய நீர்வாகத் திறமையில் மூத்தவிடம் பெறுவார்கள். மக்கள் செல்வாக்கு மனதைக் குளிரவைக்கும் அதிர்ஷ்டதினம்.

மீனம்: பலகூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். சிறியவிடயத்திற்குக் கூடக் குறைகேட்க நேரிடும். கடந்தொழிலில் ஈடுபடுவோர் கவனம்செலுத்தவும் துயர்படுத்ததினம்.

[illegible]

மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

புளியம்பொக்கணை இளைஞர் வட்டம்நடாத்திய மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி முடிவுகள் வருமாறு;

'ஏ' பிரிவு: செ. இலையதம்பி, கரவெட்டி. செ. செல்வராசா (கரவெட்டி. ம. சங்கரப்பிள்ளை, மயிலிட்டி.

'பி' பிரிவு: பொ. குணரத்தினம், கரவெட்டி. எஸ். நாகலிங்கம், வல்வெட்டித்துறை ம. சங்கரப்பிள்ளை, மயிலிட்டி.

'சி' பிரிவு: வெ. உதயகுமார், திருவையாறு. இ. சுரேந்திரன், ஸ்கந்தபுரம். வெ. உதயகுமார் திருவையாறு.

'டி' பிரிவு: (பிடிகயிறு ஒட்டம்) வ இந்திரன், விஸ்வமடு இ அமிர்தலிங்கம். புளியம்பொக்கணை ந புவனேந்திரன் புளியம்பொக்கணை.

[கா-கி]

வீதிஒழுங்கு முறையை பாதுகாக்கமாணவரும்சேவை

யாழ். நகரில் புதியதிட்டம் அமுல்

[யாழ்ப்பாணம்]

வீதி ஒழுங்கு முறைகளைப் பாதுகாப்பது பற்றிய பாடசாலை மாணவ மாணவிகளுக்கான ஒரு நாடு ஒன்றை யாழ் பொலிஸ் அதிபர் லியோ பெரேரா கூட்டினார்.

இம்நாடு நேற்று முன் தினம் காலை யாழ் பொலிஸ் நிலைய மேலைமரடி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். உதவி பொலிஸ் அதிபர் ஹேரத் இன்ஸ்பெக்டர் சேனநிராசா வீதிப் போக்குவரத்தை யாழ்ப்பாண பகுதியில் அறிமுகப்படுத்துவதற்காக கொழும்பிலிருந்து வரழப்பாணம் வந்துள்ள பொலிசாரும், யாழ். இந்துக் கல்லூரி மத்திய கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகிய ஆறு கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் நூறு மாணவ மாணவிகளும், ஆசிரியைகளும் இம் நாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ். பொலிஸ் அதிபர் லியோ பெரேரா மாணவ மாணவிகள் மத்தியில் வீதி ஒழுங்குமுறைபற்றிப் பேசுகையில் "யாழ். மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் உயர்வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் தாங்கள் கல்வி கற்கும் கல்லூரிகளின் மாணவ மாணவிகளின் பாதுகாப்பைத் தாங்களே கவனிக்க வேண்டும்" என்றார்.

போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் உரிமைகளை பொலிசார் உயர்வகுப்பு மாணவ மாணவிகளுக்கு வழங்கியுள்ளனர் இவர்கள் வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும்போது வாகனங்களின் சாரதிகள் வாகனங்களை நிறுத்திச் செல்லவேண்டும். மோட்டார் வாகனங்கள் மாட்டுவண்டி, தள்ளுவண்டி, சைக்கிள் உட்பட எல்லா வாகனங்களும் பாடசாலை வாசல்களிலும் கல்லூரி வாசல்களிலும் நிறுத்து நிறுத்தும்போது நிற்பாட்டிச் செல்லவேண்டும். இவ்வேண்டுகோளை மீறும் வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ள கடமையில் ஈடுபட்டுள்ள மாணவ மாணவிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார். [கொ]

லக்ஸ்பிறே விற்க மறுத்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

1ம் எதிரிக்கு அபராதம், 2ம் எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

'லக்ஸ்பிரே' வை விற்க மறுத்ததாக குற்றஞ்சாட்டி, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியால் தொடரப்பட்ட வழக்கில், 1-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதித்து 2-ம் எதிரியை விடுதலைசெய்தார்.

இவ்மழக்கில் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் நிமால் நிஸாயகா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் பழைய மார்க்கட் கடையை சேர்ந்த கே. சிறில்கந்தராசா, எஸ். லிங்கநாதன் ஆகியோர் 'லக்ஸ்பிரே' வைத்துக் கொண்டு விற்க மறுத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. விசாரணை ஆரம்பத்தில் குற்றச்சாட்டை மறுத்த எதிரிகள் பின், குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

எதிரிகள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி அச்சமயம் கடையில் 4 லக்ஸ்பிரே ரின் மட்டும் இருந்ததாவும், 2-ம் எதிரி கடை உரிமையாளரென்றும், அவரது மைத்துணரான 1-ம் எதிரிக்கு கடையில் 'லக்ஸ்பிரே' இருப்பது தெரியாததினால் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு இல்லை, என்று கூறிவிட்டதாகவும், 1-ம் எதிரி ஒரு மாணவனென்றும் அவர் நிரந்தர விற்பனையாளரல்லவென்றும் கூறினார்

நீதிபதி 1-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதமும், 2-ம் எதிரியை விடுதலைசெய்தார். [க]

பால்மாவை கூடுதல் விலைக்கு விற்றால் எமக்கு அறிவியுங்கள்

உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

'லக்ஸ்பிரே' பால்மா இனிமேல் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமே விற்பனை செய்யப்படும், தனிப்பட்ட வியாபாரிகள் 'லக்ஸ்பிரே'யை விற்பதும், வைத்திருப்பதும் குற்றமாகும்.

யாழ். உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. வேல்முருகு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றுமுதல் சந்தேகத்திற்குரிய கடைகள் யாவும் விலைக்கட்டுப்பாட்டு இலாகா உத்தியோகத்தர்களால் சோதனை விடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

"தனியார் கடைகளில் லக்ஸ்பிரே விற்பனை செய்யப்பட்டால் அல்லது மற்றும் பால்மாக்களை கட்டுப்பாட்டு விலையிலும் கூட்டி விற்றால், உடனடியாக தகுந்த தகவல் தருமாறும் பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பால்மா கட்டுப்பாட்டு விலையிலும் கூட்டி விற்றால் கடையிலுள்ள முழு பால்மாக்களும், பறிமுதல் செய்யப்படுமென்றும், புதிய சட்டப்படி வர்த்தகர்மீது வழக்குத்தாக்கல் செய்வதுடன் பால்மா திரும்பி கொடுக்கப்படாதென்றும்,

'லக்ஸ்பிரே' ப. நோ. கூ. சங்கங்களில், இருப்பு எடுக்கப்பட்டு, விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், விரைவில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினார்.

பால்மாக்களின் கட்டுப்பாட்டு விலை வருமாறு; நெஸ்பிரே ரூபா 13-40 ச, மாக்ஸ்பிரே: ரூபா 12-50 ச, அநுகர்: ரூபா 5-50 ச, பியர் பிராண்ட்: ரூபா 10-50 சதம். [க]

பிரபல தென்னிந்திய பாடகர்
தாராபுரம் சுந்தரராஜன்
இன்னிசைக் கச்சேரி
காலம்: எதிர்வரும் 7-6-79 வியாழக்கிழமை
இரவு 10 மணி.
இடம்: அளவெட்டி குமுளாவளைப் பிள்ளையார் ஆலயம்.
விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
2680 எட்டாம் திருவிழா உபயகாரர்.

தாராபுரம் சுந்தரராஜன் கும்பழாவளையில் நாளை பாடுகிறார்

[பண்டத்தரிப்பு]

தென்னிந்திய பிரபல பாடகர் தாராபுரம் சுந்தரராஜனின் இன்னிசைக்கச்சேரி அளவெட்டி குமுளாவளைப் பிள்ளையார் கோவிலில் எட்டாம் திருவிழா தினமான நாளை வியாழக்கிழமை இரவு நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்படி ஆலய 8-ம் திருவிழா உபயகாரர்கள் செய்துள்ளனர். விசேட பஸ் போக்குவரத்தும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் தொடர்கிறது

[புலோலி]

பருத்தித்துறை பலதோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை நேற்றுமுன்தினம் மாலை கூடி ஊழியர்களுக்கு இவ்வருடம் ஜனவரி, மேமாதங்களுக்கான 50 ரூபா அலவன்ஸ் வழங்குவதென்றும், பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான அலவன்ஸ் லாபத்தைக் கருத்திற்கொண்டு பின்னர் வழங்குவது என்றும் தீர்மானித்துள்ளது.

இக்கூட்டத்தில் கிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. டி. ஜெயசுந்தன், தலைமைக்காரியாலய இன்சுபெக்டர் திரு எஸ் தம்பிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர், ஊழியர் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனராயினும் இயக்குநர்சபையின் தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று தெரிகிறது.

ஊழியரின் வேலைநிறுத்தம் தொடர்கிறது.

இசைநிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ் நுண்கலை மன்றத்தின் ஆதரவில் திரு. ஏ. கே. கருணாகரனின் இன்னிசைக் கச்சேரி நாளை வியாழக்கிழமை மாலை யாழ் நிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. ஆர். ராதாகிருஷ்ணன் வயலினும், தஞ்சாவூர் திரு. உபேந்திரன் மிருதங்கமும், திரு. ஏ. சந்தானகிருஷ்ணன் கஞ்சிராவும் வாசிப்பர்.

வெள்ளோட்டம்

[யாழ்ப்பாணம்]

உருத்திரபுரம் பறுபதபதினி அம்மன்ஆலயத்திற்கு புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வியாழக்கிழமை காலையும், தேர்த்திருவிழா சனிக்கிழமை காலையும் நடைபெறும் இச்சித்திரத்தேர் அராலியூர் திரு. க. சி. அமரசிங்கம் ஸ்தபதி குழுவினரால் நிர்மாணிக்கப்பட்டது. [கொ]

இன்று கப்பல்திருவிழா

[அராலி]

அராலி முத்துமாரியம்மன் கோயிலில் இன்று பகல் கப்பல் திருவிழா நடைபெறும். இரவு பூஞ்சப்பரத்தில் சுவாமி வீதி வலம் வருவார்.

உலகக் கிண்ண தகுதிகாண் அரை இறுதிப் போட்டி

இலங்கை-டென்மார்க் இன்று மோதுகின்றன

லண்டன் ஜூன் 5

உலக வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தகுதிகாண் அரைஇறுதி ஆட்டம் நாளை பர்மிங்காமில் நடைபெறுகிறது.

இலங்கைக் கோஷ்டி டென்மார்க்கையும் கனடாமுடாவையும் எதிர்த்து ஆடுகின்றன் டென்மார்க்குக்கு எதிராக நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படும் இலங்கை தகுதிகாண் ஆட்டத்தின் இறுதிப் போட்டியிலும் வெற்றிபெற்று சரிவதேச கிரிக்கட்களம் வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

கம்பூச்சியா பிரச்னைக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட கம்பூச்சியாவின் பொல்பொட் அரசின் பிரதிநிதிகள் வெறும் பார்வையாளர்களாக இருக்கச் சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இப்பிரச்னை தற்காலிகமாகக் கைவிடப்பட்டதற்குக் காரணமென்று கூறப்படுகிறது. இன்று ஆரம்பமாகுக அணிசேரா அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் கம்பூச்சியாவின் பொல்பொட் அரசின் பிரதிநிதிகளும் இன்றைய கம்பூச்சிய மக்கள் புரட்சிகரக்குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எகிப்தின் பிரச்னை

அணிசேராநாடுகளின் இயக்கத்திலிருந்து எகிப்தை வெளியேற்றவேண்டுமென்ற கோரிக்கைக்கு பல நாடுகள் ஆதரவளித்துள்ளபோதிலும் அந்தப் பிரச்னைக்கும் கம்பூச்சியாவுக்குத் தீர்வு காணப்பட்டது போல் ஒரு தீர்வு கரணப்பட்டு விடுமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

வாஜ்பாய் சந்திப்பு

இது ஆரம்பமாகும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாயி நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார். இப்பேச்சுவார்த்தையில் பிரதமர் ஆர் பிரேமதாசாவும் கலந்துகொண்டார்.

அணுஆயுதக்குறைப்பு உட்பட முழுப்படைக் குறைப்பு பற்றி இருவரும் பேசியதாகத் தெரியவருகிறது. முழுஆயுதப் படைக்குறைப்பே இந்தியாவின் கொள்கையென்றும் இதையே இலங்கை ஜனாதிபதி யும், தெரிவித்திருக்கிறாரென்றும் திரு. வாஜ்பாயி நேற்று சென்னையில் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தானுக்கு ஆதரவு

பாகிஸ்தானை அணிசேரா நாடுகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதற்கு இந்தியா உட்பட பல நாடுகள் ஆதரவுதெரிவித்திருக்கின்றன. ஈரான், சிரியா, பெர்முடா நாடுகளின் மனுக்களுக்கும் ஆதரவு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

அணிசேரா நாடுகளின் இணைப்புப்பணியக அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டை இன்று புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனா வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கிறார்.

யாழ்.நகரில் போபகே

[பண்டத்தரிப்பு]

மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்புச் செயலாளர் திரு. லயனல் போபகே யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

வடபகுதியில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களுடனும், ஆதரவாளர்களுடனும் விரைவில் நடைபெறவிருக்கும் கிராம கவுன்சில் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாக இவர் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றார். [இ]

எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

அத்துமீறிப் பிரவேசித்துக் காயம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு நிமால் ஈ. திஸநாயகா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் 77 ஜனவரி 21ம் திகதி புத்தூரில் எஸ். சந்திரசேகரம், கே.செல்லத்துரை, கே. தர்மலிங்கம், பி, பரமசாமி ஆகியோர் அத்துமீறிப் பிரவேசித்து திருமதி முத்தம்மா பொன்னம்பலத்திற்கு காயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி, சபாரத்தினம் ஆஜராகினார். வழக்காளி சார்பில் சட்டத்தரணி கே. உலகநாதன், சட்டத்தரணி கே. தயாளேந்திரன் ஆகியோர் ஆஜராகினர். விசாரணையின் பின் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார். [க]

மரண அறிவித்தல்
அரியகுட்டி இராசையா
யாழ். மத்திய கல்லூரியில் 30வருடங்களுக்கு மேலாக ஆய்வு கூட உதவியாளராகப் பணி புரிந்த திரு. அ. இராசையா காலமானார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் பங்குடுதிவு 3ம் வட்டாரத்திலுள்ள திரு. கதிரவேலுவின் இல்லத்தில் இன்று நடைபெறும். 2683

இவ்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிங்கர்கோவில் மேற்கு விதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8943/78 The Eelamnadu P B No' 43, Telegrams: Eelamnadu! Phone: 888.